நொய்யல் நீர்த்தேக்கம்

*3023 திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நொய்யல் நீர்த்தேக்கத்திலிருந்து எப்போது விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நொய்யல் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் பெரும் பகுதி முடிக்கப்பட்டு விட்டன. நொய்யல் ஆற்றிலிருந்து ஆத்துப்பாளையம் மண் அணைக்குத் தண்ணீர் கொண்டுவரவுள்ள ஊட்டுக்கால்வாய் வெட்டுவதை எதிர்த்து சில நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலங்கள் வழியாக கால்வாய் வெட்ட அனுமதி மறுத்து நீதிமன்றத்துக்குச் சென்று வழக்குகளைத் தொடுத்துள்ளனர். அதனால் அப்பகுதியில் கால்வாய் வெட்டும் பணிகள் தடைபட்டன. திட்டத்தை நிறைவேற்றுவதில் மேற்கொண்டு காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, வேறு ஒரு இடத்தில் ஊட்டுக்கால்வாயை ரூ. 4.23 இலட்சங்களில், அதிகச் செலவில் வெட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. எனவே திட்டம் முடிந்த உடன் அந்தப் பகுதியிலே விவசாயத்துக்குத் தண்ணீர் விடப்படும்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊட்டுக்கால்வாய் வெட்டுகிற வேலை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் தீவிர முயற்சியாலே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2 மாத காலத்துக்குள்ளாக வேலை முடிவடையும் நிலையில் இருக்கிறது. ஒரு மாத காலம் முடிவடைந்துவிட்டது. அந்தப் பணி இப்போது மீண்டும் தொய்வடையும் நிலையில் இருக்கிறது. நிர்வாகக் காரணத்தாலே தொய்வடையும் நிலையிலே இருக்கிறது. அது பற்றி பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அது தெரிந்தால் அதற்கான நடவடிக்கைகள் என்ன எடுத்தார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சோர்ந்து போய், இருக்கிற இடமே தெரியாமல் இருந்த அணை நொய்யல் அணை. இதை அரசு இவ்வளவு விரைபடுத்துவதாக சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் ராமசாமி அவர்கள் சொன்ன இடைவிடாத முயற்சி என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவர் குறிப்பிட்டதைப் போல ஊட்டுக்கால்வாய் வெட்டுவதிலே இன்னும் வழக்கு

1990 மே 9]

மன்றத் தீர்ப்பை எதிர்பார்த்து இருந்தாலும் கூட, அரசு தனியாக 4 1/4 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அந்தக் கால்வாய் வெட்டுகிற பணியைச் செய்து கொண்டிருக்கிறது. இவ்வளவு செய்த பிறகும் அரசாங்கம் மெத்தனப் போக்கில் இருக்கிறது என்று சொல்வது தான் எனக்கு விந்தையாக இருக்கிறது. அப்படி இருக்குமானால் அந்த மெத்தனத்தைப் போக்கி விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அந்த வேலை துரிதமாக நடைபெறுவதற்கான காரணத்தைச் சொன்னார்கள். அதற்காக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு அந்த வேலை ஒரு மாத காலத்தில் முடிவடையும் நிலையில் இருக்கிறது. அங்கு இருக்கிற அந்த ஒப்பந்தக்காரர் 500 ஆட்களை வைத்து ஏககாலத்தில் வேலை செய்தார். அவருக்கு உடனடியாக சேரவேண்டிய பில்தொகை கொடுக்கப் படாமல் நிறுத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தாலே, அந்த 500 ஆட்களை பாதியாகக் குறைத்து இன்றைக்கு 150 ஆட்களை வைத்து வேலை செய்து கொண்டு இருக்கிறார். எனவே உடனடியாக அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படுமானால் ஒரு மாத காலத்தில் அந்தப் பணி நிறைவேற்றப்பட்டு, வருகிற ஆகஸ்ட் மாதத்தில் நம்முடைய முதல்வர் அவர்களாலே அந்த அணையைத் திறந்துவைக்கிற வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்து அந்த வேலை மிக விரைந்து நடைபெற வேண்டும் என்று ஒரு விண்ணப்பமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதம் பொதுவாகவே பில்கள் தாமதம் ஆகும். இப்போது தானே மார்ச் முடிந்து இருக்கிறது. அடுத்த மாதம் பில் தொகை விரைவில் கொடுக்கப்படும், வேலை துரிதமாக்கப் படும்.

திரு. ப. மூத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை எவ்வளவு? எந்தெந்தத் தொகுதிக்கு அந்தத் திட்டம் பயன்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்தத் திட்டத்துக்கு 1981 ஆம் ஆண்டு 713 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எந்தெந்தப் பகுதிக்கு அதனுடைய பயன் என்பதைப் பொறுத்தவரையில் பெரியார் மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் அதனுடைய பயன் உண்டு.

9-50 மணி